ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2190/32 - 2020 අගෝස්තු මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.08.27
*2190/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2020 ஆம் ஆண்டின் 112 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : LD/05/2008/MV/408-D.
பி. செ. குறிப்பு இல. : 11/3/3/1/14.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரக்கோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஓகத்து 26.

### அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், லக்கல-பல்லேகம.

2. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல-பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவில் லக்கல-பல்லேகம பற்று சிறு பிரிவில், (இ.கி.வ. 2 இல்) அமுணெவெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட Ma/LGG/2017/567 ஆம் இலக்க 2018.05.31 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட கீழ்வரும் பெயரையும் விஸ்தீரணத்தை கொண்ட பின்வரும் காணித்துண்டுகளின் எல்லைகள் :

1. **துண்டு A – திக்யாய – விஸ்தீரணம் : 24.3195 ஹெக்டயார்**

வடக்கு : வஸ்கமுவ தேசிய வன பூங்கா ; கிழக்கு : வஸ்கமுவ தேசிய வன பூங்கா ; தெற்கு : துண்டு இல. 49 ; மேற்கு : வஸ்கமுவ தேசிய வன பூங்கா.

09 - 255